SITHY VINAYAGAR LIBRARY
EARALAI WEST
CHUNNAKAM

மில்க்வைற் செய்தி
Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ❋ புரட்டாதி 1987 ❋ இதழ் - 141


# நினைவுபடுத்துகின்றோம்



இமயஜோதி சிவானந்த மகராஜ் இமயம் போன்ற தோற்றம் உள்ளவர். அவர் உடலாலும் உள்ளத்தாலும் உயர்ந்தவர். அவர் விரக்திபற்றித் துறக்கவில்லை. வேண்டும் என்றே துறந்தவர். அவர் துறவு தூய்மையானது அவர் உடற்பிணி போக்கியபின், உளப்பிணி போக்கச் சந்நியாசம் பூண்டவர்.

அவர் அப்பைய திட்சதர் பரம்பரையில் வந்தவர். சங்கராசாரியர் வழியில் மடம் அமைத்து வேதாந்தம் பரப்பியவர்.

வேதாந்தம் வேறு மெய்யியல்கள்போல வரட்டுக் கோட்பாடு உடையதல்ல, அது சிவோகம் பாவனையின் வளர்ச்சி. வேதாந்தத்து உச்சி சைவ சித்தாந்தம். வேதத்தின் உச்சி உபநிடதம். அது வேத சிரசு. வேத அந்தம். அந்த ஓடும் வேதாந்தத்து உச்சியிற் பழுத்த பழத்தின் சாரம் சைவசித்தாந்தம். இவையெல்லாம் ஆற அமர இருந்து படித்து அநுபவித்து உணர்ந்து சிந்தித்துத் தெளியவேண்டியவை. பரபரக்காமல் பலகாலும் பயின்று பழுத்து அறியவேண்டியது. பயின்றவர்கள் சொன்னவற்றைப் பயபக்தியோடு சாதனைமூலம் அறிந்துகொள்ளுதல் வேண்டும். அநுபவ ஞானம் பெரியது. அது அநுபூதி ஞானத்தின் படி.



பருத்தித்துறை வட மகளிர் இந்துக்கல்லூரி வளவில் அதிபரும், முன்னாள் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் உயர்திரு பொ. மாணிக்கவாசகர் அவர்களும், மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா ஜே. பி. அவர்களும் முதல்மரம் நாட்டிய வைபவம்.

★ சுவாமி சிவானந்தஜீ சிறப்பிதழ் ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## சுந்தரமூர்த்திநாயனுர் தேவாரம்

### திருப்பழமண்ணிப் படிக்கரை

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

முன்னவன் எங்கள் பிரான்
  முதல் காண்பரி தாயபிரான்
சென்னியில் எங்கள் பிரான்
  திருநீல மிடற் றெப்பிரான்
மன்னிய எங்கள் பிரான்
  மறைநான்கும் கல்லால் நிழற்கீழ்ப்
பன்னிய எங்கள் பிரான்
  பழ மண்ணிப் படிக்கரையே.

திருச்சிற்றம்பலம்

எல்லோருக்கும் முன்னே உள்ளவரும், தமக்கு முன்னுள்ள பொருள் இல்லாதவரும், யாவரிலும் தலையாயவரும், அழகிய நீலகண்டத்தையுடையவரும், என்றும் அழியாது நிலைபெற்றிருப்பவரும், நான்கு வேதங்களையும் கல்லாலமர நிழழிலிருந்து சொல்லியருளியவருமாய், எங்கள் தலைவருமாய் உள்ள இறைவன் எழுந்தருளி இருப்பது திருப்பழமண்ணிப் படிக்கரை என்னும் தலமாகும்.

உ



# திருவள்ளுவர் திருக்குறள்

## அவை அஞ்சாமை

(பேசுவதற்குரிய இடத்தைத் தெரிந்து, பேசத் தொடங்கியபிறகு அதற்கு நடுங்காமை.)

"கற்றருள் கற்றர் எனப்படுவர் கற்றர்முன்
கற்ற செலச் சொல்லுவார்."

தாங்கள் கற்றவற்றைப் புலவர்களின் அவையில் அவர்கள் ஏற்றுக்கொள்ளும்வண்ணம் சொல்லுபவர்கள், படித்தவருள் படித்தவராக மதிக்கப்பெறுவர்.

## Freedom from Nervousness before an Audience

He is regarded a learned man among men of learning who can expound his learning to the learned in a persuasive manner.

## 1987 செப்ரம்பர் மாத நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 1. | செவ்வாய் | — அட்டமி பகல் 4-35 |
| 2. | புதன் | — அட்டமி நவமி |
| 3. | வியாழன் | — நவமி பகல் 12-22 வரை<br>ஏகாதசி விரதம் |
| 5. | சனி | — பிரதோஷ விரதம் |
| 6. | ஞாயிறு | — நடேசர் அபிடேகம் |
| 7. | திங்கள் | — பூரணை விரதம்<br>உமாமகேஸ்வர விரதம் |
| 8. | செவ்வாய் | — மஹாளயபட்சாரம்பம்<br>சுவாமி சிவானந்தர் ஜனனதினம் |
| 9. | புதன் | — ஆனந்தக்குமாரசுவாமி மறைவு |
| 11. | வெள்ளி | — பாரதியார் தினம் |
| 13. | ஞாயிறு | — கார்த்திகை விரதம் |
| 14. | திங்கள் | — இரவு 8-02 அட்டமி<br>கிருஷ்ண ஜயந்தி<br>சேர். அருணசலம் பிறந்ததினம் |
| 15. | செவ்வாய் | — அட்டமி நவமி |
| 16. | புதன் | — நவமி இரவு 10-50 வரை |
| 17. | வியாழன் | — தமிழ் புரட்டாதி பிறப்பு<br>திரு. வி. க. நினைவு |
| 18. | வெள்ளி | — ஏகாதசி விரதம் |
| 20. | ஞாயிறு | — பிரதோஷ விரதம் |
| 21. | திங்கள் | — வல்லிபுரம் கொடி |
| 22. | செவ்வாய் | — அமாவாசை விரதம்<br>மஹாளய முடிவு<br>அருணந்தி சிவாசாரியார் குருபூசை |
| 23. | புதன் | — நவராத்திரி ஆரம்பம்<br>பெருமாள்கோயில் கொடி |
| 29. | செவ்வாய் | — பின்னிரவு 3-21 அட்டமி |
| 30. | புதன் | — அட்டமி நவமி<br>ராஜா சேர். அண்ணமலை செட்டியார் தினம் |

## Everything Good
### (Swami Sivananda)

1. To love to serve
2. Time is more precious than money.
3. He who plants kindness gathers love.
4. Friendship stops when borrowing begins.
5. He who obeys commands others.
6. Courtesy is the sister of charity.
7. Do not talk much before big people.
8. Love is the greatest force on earth.
9. Share with others what you have.
10. Cruelty to creatures is cruelty to God.

★ கடவுள் இல்லாமல் உயிர்வாழ முடியாது ★

உ



## காலை எழுந்ததும்

1. நாங்கள் உண்மையே பேசுவோம்
2. கோபத்தை அடக்குவோம்
3. தீயஎண்ணம் கொள்ளமாட்டோம்
4. எவரிடத்தும் பகைமை பாராட்டமாட்டோம்
5. கடவுளைச் சிந்தித்துக் கடமை செய்வோம்

இறைவன் மீது கொள்ளும் நம்பிக்கையும் விசுவாசமும் இறைவனின் இன்னருள் பெறுவதற்கு முதற்படி. இறைவனிடம் பூரண நம்பிக்கை கொண்டு, அவரிடம் முற்றாகச் சரணமடைந்தால் எல்லாம் கிடைக்கும். விசுவாசம் இறைவனின் ஆலயத்தைத் திறக்கிறது. விசுவாசம் இறைவனின் திருவடிகளிற் சேரும் பரமபதத்தைத் தரும்.

நல்ல நூல்களை நாடோறும் வாசித்து, நல்லவர் பெரியவர்களை வணங்குதல் வேண்டும். பெரியவர்கள் ஞானிகள் தங்கள் இறையனுபவத்தையே எமக்கு நூல்களில் தந்துள்ளார்கள்.

பெரியவர்களின் ஆசிர்வாதம் எமக்கு நல்ல பலனைத் தரும் என்பது உறுதி. நான் மேல்நிலை அடைதல் வேண்டும் என்பதில் ஆசை கொள்ளுதல் வேண்டும். என்னை ஆண்டவனின் சொத்து எனக் கருதவேண்டும். நான் ஓர் அழகிய பூ. பூவாகிய என்னை இறைவன் அணிந்து கொள் என்று நினைத்தல் வேண்டும். இந்த நினைப்பு, ஏக்கம் ஒரு நிவேதனம் ஆகிவிடும்.

## உருளி என்னும் சில்லு

தலையிலும் தோளிலும் சுமந்து சென்றதும், பாரம் அதிகமானால் தரையிலிட்டு இழுத்துச் சென்றதும் பழைய காலம். பின்னர் சில்லைக்கண்டு வண்டிசெய்து வாகாக ஏற்றிச் சென்றதும் உண்டு. பழைய காலத்து வண்டிச் சில்லு உருளி எனத்தமிழன் வாயில் ஒலித்தது. சங்க காலத்திற்கு முந்தியே வண்டியோடக் கண்டவன்தமிழன்.

வண்டிச்சில்லில் அமைந்த சிலைக்கம்புகள் என்னும் ஆரங்கள் அமைவாகப் பொருந்தியமையைப் புலவர் ஒருவர், "கொழுஞ் சூட்டருந்திய திருந்து நிலையாரத்து முழவினன்ன உருளி" என்று பாடினார்.

உருளையின் சிலைக்கம்புகள் தன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம் என்னும் எட்டினது முடிவு காண முடியாது உருளுகின்றன என்னும் கருத்து ஒன்று உண்டு. அதனாற் போலும் சிலைக்கம்புகளின் தொகையும் எட்டாய் இருந்தன. இந்த எட்டுக்குள்ளே தான் உயிர் சுற்றிச் சுற்றிச் சுழல்கின்றது.

## கூர்மபுராணத்தில் ஒருகதை

நாரதமுனிவர் ஒருநாள் காட்டுவழியாலே போன போது, வழியில் பெரியவர் ஒருவர் நீண்டகாலம் தவஞ் செய்த நிலையில் அவரை மூடிக்கறையான் புற்றெடுத்திருப்பக்கண்டார். புதருள் இருந்து கடுந்தவஞ் செய்த பெரிய முனிவர், நாரதர் அருகே வந்தமையை உணர்ந்து கண்விழித்துத் தனக்கு மோட்சகதி எப்போது கிடைக்கும் எனக்கேட்டார். நாரதர் இன்னும் நான்கு பிறவிகளின் பின் கிடைக்கும் என்றார். உடனே தவசிமனமுடைந்து அழுதார். நாரதர் அப்பால் சென்ற வழியில் ஒருவன் ஆடிப்பாடிக் குதூகலித்து நின்றான். அவன் நாரதரிடம் தனக்கு மோட்சம் எப்போது கிடைக்கும் என்று கேட்டான். அவர் பக்கத்தில் நின்ற புளியமரத்தைக் காண்பித்து இம்மரத்திலுள்ள இலைகளின் எண்ணிக்கையுள்ள பிறவிகளின் பின் கிடைக்கும் என்றார். இதைக் கேட்டதும் அவன் துள்ளிக்குதித்து மகிழ்ந்து தனக்கு மோட்சம் வெகுவிரைவில் கிடைக்கப் போகிறது என்று குதூகலித்தான். அவ்வேளை அசரீரியாக ஒரு குரல் கேட்டது, "என் குழந்தாய்! உனக்கு இதோ இந்த நொடிப் பொழுதிலே மோட்சம் கிடைக்கும் நீயே உண்மையை அறிந்த உத்தமன்."

## இந்துநாகரிகத்தில் பண்டைய விழாக்கள் பண்டிகைகள்

பண்டைத் தமிழர் பண்பாட்டிற் பொங்கற்பண்டிகை சிறப்பிடம் வகித்தது. வேதங்கள் சூரியன் என வழங்கிய கண்கண்ட தெய்வத்தைத் தமிழ்மக்கள் ஞாயிறு என்று போற்றினர். ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என்றே சிலப்பதிகாரம் ஆரம்பிக்கிறது. ஞாயிறு ஒளியையும் வெப்பத்தையும் தரும் பெரும்சக்தி என்றும், அதனாலே தான் தானியங்கள் தாவரப்பயன்கள் விளைகின்றன என்றும் கண்ட தமிழர் ஞாயிறின் வடதிசைப் போக்கின் ஆரம்பகாலத்தில் தை மாதத்து முதலாம் நாளில், அதிகாலையிற் பொங்கலிட்டுப் படைத்து வணங்கினர், போற்றிசைத்தனர்.

## இலங்கையிற் கண்ணகி வழிபாடு

ஒருகாலத்தில் இலங்கை எங்கும் கண்ணகிக்கு விழா வெடுத்துக் கொண்டாடினர்யாப்பாணத்து அரசர்களுள் ஒருவனாய செகராசசேகரன் என்பான், கவிராசபண்டிதன் எனவும் பெயர் பெற்றவன். அவன் புரவலனாயிருந்தவாறே புலவனாயும் வாழ்ந்தவன். அவன் கண்ணகி வழக்குரை என்னும் காவியஞ் செய்தவன்.

கண்ணகி வழக்குரை என்னும் காவியம், முன்னர் சிலப்பதிகாரம் என்னும் பெருங்காப்பியம் சேர சோழ பாண்டி நாடுகளுக்குச் சொந்தமாயிருந்த வகையில்; இந்தநூல் இங்கே மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய முப்பெரும் பிரதேசங்களுக்குச் சொந்தமாயிருந்தது. இது மட்டக்களப்பில் கண்ணகி வழக்குரை எனவும், முல்லைத்தீவில் சிலம்பு கூறல் எனவும், யாழ்ப்பாணத்தில் கோவலனார் கதை எனவும் வழங்கி வந்தது. ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் இக்கதை எங்கும் படிக்கப்பெற்று வந்தது.

★ கடவுள் நம்மைப் பார்த்தவண்ணம் இருக்கிறார் ★

உ

## ஞானமிர்தம் கண்ட தேர்

சைவசித்தாந்தம் நுதலிய ஞானமிர்தம் என்னும் பெருநூல் வாகீச முனிவராற் செய்யப் பெற்றது. அவர் பன்னிரண்டாம் நூற்றுண்டில் இரண்டாம் இராசாதிராசன் (1163 – 1178) காலத்தில் வாழ்ந்த பெரியார்.

வாகீச முனிவர் தேராதி வாகனங்களில் வைத்துத் தேகி உண்மை கூறும்போது, இரண்டு காலாலாகிய உருளையும், பழுவெலும்பு இடையே செறிந்த வீணைதண்டென்னும் அச்சு மரத்தையும், மலைபோன்ற மார்பு என்னும் தட்டையும், மயிரையுடைத்தாகிய தோலென்னும் கிடுகையும், சென்னியாகிய தலையலங்காரத்தையும் உடைய சரீரமாகிய தேரை ஊர்வோனாகிய ஆன்மா; என்று சொல்லியருளி, தேரைக் குதிரை யானை இழுத்துச்செல்லும் வழக்கத்தையும் கூறியருளுவர்.

"இருகா லாழிக் கொளுவிடை வீணை
தண்டென் ஆரின் விண்டு வன்ன
மருமத் தட்டின் மயிர்த்தோல் கிடுகின்
சேகரக் கூவிரத் திகிரி யூர்வோன்
கொய்யுளைக் கொடிஞ்சி குஞ்சரம்
மையுக வூருநர் செய்தியின் மதியே"

## தமிழ் நாட்டுச் சித்தர்கள்

தமிழ்நாட்டில் சமணர், பௌத்தர்களின் செல்வாக்கு வெகுவாகக் குறைந்த போது, வடநாட்டுப் பழக்கவழக்கங்கள் வழிபாட்டு முறைகள் பல வேரூன்றத் தொடங்கின. பல தெய்வவழிபாடு முதலாய வரன் முறைகள் புகுந்தபோது சிவனையன்றி வேறெவரையும் வணங்காத திருவுள்ளம் படைத்த சித்தர்கள் தோன்றினார்கள். அவர்கள் புலன்களை அடக்கிச் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன் என்று சுந்தரமூர்த்திநாயனார் தொகையடியார் திருக்கூட்டத்தைப் போற்றியமையும் இங்கே கருதற்பாலது.

கொங்கணர் என்பார் பெரிய சித்தர். அவர் தெய்வம் ஒருவனே எனத்தேறி அவர் சிவபெருமானே எனக் கண்டு பாடியவர். அவர் பாடியருளிய பல பாடல்களுள் ஒன்றைப் பதம் பார்க்கலாம்.

"கடவுளோன் ஒருவன் உண்டே,
வேதம்ஒன்றே, காரணசற்குரு தீட்சை
தானும்ஒன்றே, அடை வுடனே
அவனருளுள்ளும் பதவி ஒன்றே,
அம்புவியின் மனுப்பிறவியானது ஒன்றே
நடைவழியும் பலமனுவோர்க்கு ஒன்றே
அல்லால்நால் வேதமறுசமய நடக்கை
வேறுய்த் திடமுடைய தேவர்பலருண்டு
என்போர்கள் நரகுக்குள்ளாவர் திண்ணந்தானே"

MILK WHITE PRODUCTS ARE
SUCCESSFUL CHOICE EVERYWHERE

## அருள் தாகம்

எமக்குத் தண்ணீர் பருகவேண்டும் போது தாகம் உண்டாகிறது. உணவு தேவையான போது பசி எடுக்கிறது. உறக்கம் தேவையான போது நித்திரை வருகிறது. இறைவனின் அருள்வேண்டும் போது அருட்டாகம் உண்டாகிறது.

அருள்தாகம் இல்லாவிட்டால் நாம் இரண்டு கால் மிருகமேதான். பிரார்த்தனை, தியாகம், பற்றற்ற சேவை, பெரியவர் கூட்டம் இவைகள் அருள்தாகம் தீர்க்கும் வழிகள்.

அருள்தாகம் உள்ளவர்களை நோக்கி ஆண்டவன் விரைந்து ஓடி வருகிறார். அவர் எங்கும் நிறைந்தவர். எல்லாம் வல்லவர். எல்லாம் அறிபவர். எமக்கு என்ன தேவை என்பதை அறிந்து அவற்றைக் கொண்டுவந்து தருபவர்.

நாங்கள் இறைவனின் சொத்து. இறைவன் தனது சொத்தைப் பார்த்துக் கொள்ளுவார். நாங்கள் இறைவனின் சொத்தாக இருந்துகொண்டு, மற்றதெல்லாம் எங்கள் சொத்து என்று சொல்லுதல் மடமை. எல்லாம் சிவமயம் எல்லாம் சிவன் சொத்து.

துறவு என்றால் என்ன? "உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் இறைவனுடையவை." என்று நாம் கருதி அவற்றை அபகரிக்காமல் இருத்தலேயாம். இறைவன் எமக்கு என்ன வேண்டுமோ, அதனை அறிந்து தானே தருவார். அவர் வேண்டத்தக்கது அறிபவர். வேண்ட முழுதும் தருபவர். எமக்கு வேண்டியவற்றை நாம் அவரிடம் கேட்டு வாங்குதல் வேண்டும்.

## சிவானந்த வழி

வடக்கில் பிரசித்தி பெற்ற வேதாந்த தத்துவத்தின் வழியையே சிவானந்தசோதி செப்பமிட்டு வந்தார். சங்கராசாரியர் சொன்னவற்றுள் உபநிடதம், கீதை, பிரம்ம சூத்திரம் ஆகிய முப்பெருங்காட்சிகளான தரிசனத்திரயத்தையே முக்கியமாகச் சிவானந்தகுரு கையாண்டிருந்தார்.

இவற்றை விளக்கி ஆயிரக்கணக்கான கட்டுரைகளும் நூற்றுக்கணக்கான நூல்களும் எழுதினார். இமயத்தின் வாசற்படியான இருஷிகேசம் என்னும் இடத்தைக் கோபுர வாசலாக்கி அங்கே தாம் கோபுரம் போல இருந்து திசைகாட்டி உலகப்புகழ் பெற்றார்.

சேவை செய்து, அன்புகாட்டி, கொடுத்துதவி, உள் சுத்தமடைந்து, தியானஞ்செய்து, கடவுளைக் காணலாம் என்பது அவருடைய போதனை. அவர் எக்கோலம் பூண்டு, ஏதவத்தைப்பட்டு, என்னத்தைச் சொன்னாலும் நல்லதையே சொல்லி, நல்லதையே செய்து, நாமுயர, நாடுயர உலக முய்யச் செய்தார் என்பதை அறியலாம்.

முதலில் உடற்பிணியைப் போக்கிய வைத்தியன் குப்புச்சாமியாயிருந்தவர், நாளடைவில் உயிர்ப்பிணி போக்கும் வைத்தியநாதனாகிச் சிவானந்த சோதியாயிருந்தவர்.

★ உலகப் பொருள்களுக்குக் கடவுளே அடிப்படை ★

VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM



உ

## பிராணன்

நமது மூக்கின் வழியாகப் பழகிவரும் காற்றுக்கு பிராணன், சுவாசம், மூச்சு, ஆவி, உயிர், உயிர்ப்பு, மனம், சரம் முதலாகப் பல பெயர்கள் வழங்குகின்றன.

வலது மூக்கில் சூரியகலே என்றும் இடது மூக்கில் சந்திரகலே என்றும் மாறிமாறி ஓடும் மூச்சுஎமது வாழ்வுக்கு அறிகுறி, வாழ்வுக்கு வளம்.

சூரியகலேயைப் பிங்கலே எனவும் வழங்குவர். இது வலது மூக்கில் ஓடும்போது பல சற்கருமங்களும் செய்வார்கள்.

சாதாரணமாக நாம் சுவாசிக்கும் காற்றுக்கு அதிக சக்தியுண்டு. காற்று பஞ்ச பூதங்களில் ஒன்று. அது நமது உடம்புக்கு அவசியம் தேவை. காற்று சுத்தமாயிருத்தல் வேண்டும். சுத்தமான காற்றில் பிராணவாயு என்னும் உயிர்வளி ஒக்சிசன் வீதம் குறையாமலிருத்தல் வேண்டும். அது சாதாரணமாக 20 வீதமே நிலவுகிறது. எஞ்சியவளியில் பெரும்பகுதி உப்புவளி என்னும் நைற்ரஜின் ஆகும். இன்னும் மிகக் குறைந்த அளவில் கரியமிலவாயு போன்றவையும் உண்டு.

நாம் சுவாசிக்கும் வளியில் பிராணவாயுவே எமக்குப் பயன் தருகிறது. அது நுரையீரலேயடைந்து குருதி என்னும் இரத்தத்தைச் சுத்திகரிக்கிறது. அன்றிக் கழிவுப் பொருள்களே வெளியேற்றியும் விடுகிறது.

நாம் காற்றை உள்ளே இழுத்தால் உட்சுவாசம் எனப்படும், வெளியே விடுதல் வெளிமூச்சு எனப்படும். சாதாரணமாக ஒரு நிமிடத்தில் 18 முறை சுவாசிக்கிருேம். கடுமையாக வேலே செய்யும் போது இன்னும் கூடுதலாகச் சுவாசிக்கிருேம்.

இவ்வாறு மூச்சுவாங்குதல் விடுதல் என்பவற்றைக் கட்டுப்படுத்துதல் உடம்புக்கும் மனத்துக்கும் பெரும் பயனளிக்கும். அது ஒரு மகத்தான யோக சாதனேயுமாகும். இதனுல் உடலில் ஒரு அற்புதக்கூத்து, ஆனந்தக் கூத்து உண்டாகும்.

இந்தக் கூத்தின் பயனுக இரத்தத்தில் நிறைந்துள்ள செவ்வுடலி என்னும் றெட்கோபசில்ஸ் ஆயிரமாயிரமாகப் புதுப்பிக்கப்படும். அன்றி ஆழமான மூச்சினுல் போதியளவு சுத்தமான காற்று பயன் தருகிறது.

நல்லமுறையில் ஆழமாக மூச்சை இழுத்து ஆறுதலாக வெளிவிடுதல் தலேசிறந்த ஆரோக்கியந் தருவதாகும். மனமும் சாந்தியடைகிறது. மனதுக்கும் மூச்சுக்கும் சம்பந்தமுண்டாக்குவது ஒரு யோகக்கலே.

நாம் மூச்சு இழுத்து வெளியே விட்டபின்னும், அற்புதமான நுரையீரல் சுவர்களில் பழைய காற்று ஓரளவு ஒட்டிக்கொண்டிருக்கும். அதைச் சுத்திகரிப்பதற்கு புதுக் காற்றுப் போதியளவு சுத்தமானதாய் உட்புகுதல் வேண்டும்.

உள்ளே புகும் காற்றுச் சிறிதளவு நேரம் அங்கே தங்கி நின்ருல் அற்புதமான சாதனேகள் புரியும். இதுவே பிராண சக்தி. இதனைத் தொழிற் படுத்துவதற்குப் பிராணனே அடக்கி ஆளும் திறமை நமக்குப் பயிற்சி மூலம் உண்டாதல் வேண்டும். இந்த ஆளுமையைப் பிராணுயாமம் என்பர். பிராணன் எம்வசப்பட்டால் நாம் பெரியவராவோம். உடல் உயிர் சுகம் யாவும் எம்வசமாய் விடும். நோய்களுக்கு இடமே இல்லே. இயமனேயும் ஆறுதலாகவா என்று விரட்டிவிடலாம்.

பிராணுயாமம் என்ருல் சுவாசத்தை வெளிவிடுதல், இழுத்தல் நிறுத்தல், வெளிவிடுதல், இழுத்தல், நிறுத்தல் என்னும் படிக்கிரமமாகும். இதில் மூன்று செயற்பாடுகள் நடைபெறுகின்றன. ஒன்று வெளிவிடுதல் அது இரேசகம். மற்றது. சுவாசத்தை வாங்குதல் பூரகம். அதை உள்ளே நிறுத்துவது கும்பகம்.

### பிராணுயாம சாதனத்துக்கு ஆசனம்

தூய்மையான இடத்தில் அமைதியான சூழலில் மான்தோல், புலித்தோல், தர்ப்பைப்பாய், வெண்ணிறப் புடைவை, நல்ல கம்பளம், நல்ல பலகை ஏதாவது ஒன்றில் அமர்ந்து நிமிர்ந்து பத்மாசனங் கொள்ளல் முறை.



## இந்துப்பண்பாட்டில் சிவானந்தர் கண்ட இதயப்பண்பாடு

பிறருக்கு இதம் செய்வதே இதயப்பண்பாடு இதம் நன்மை. இருதயம் நன்மை செய்யுமாறு தூண்டவேண்டும். பிறருக்கு நன்மை செய்வதால் நம்மைப் பீடித்த நான் என்னும் அகங்காரம் குறையும். நமது என்னும் செருக்குக் குறையும். நமது என்பது ஒன்றும் இல்லே. எல்லாம் அவன் செயலால் ஆனது. நாம் இவ்வுலகுக்கு வந்தபோது எதனேயும் கொண்டு வரவில்லே. எதனேயும் கொண்டு போவதும் இல்லே. இங்கே கிடைத்தவற்றை நாமும் அனுபவித்து, மற்றவரும் மகிழும் வண்ணம் கொடுத்துதவ வேண்டும். நாம் முதலில் பழகவேண்டிய இதயப்பண்பாடு பணிதல். எவரையும் மதித்துப் பணிந்து அவரிடம் உறையும் இறைவனே மானசீகமாக வணங்குதல் வேண்டும்.

★ கடவுள் அந்தர்யாமியாகி உள்ளே உறைகிருர் ★

## இந்துசமயம், இந்துநாகரிகம், இந்துப்பண்பாடு

இந்துசமயம் பல்லாண்டுப் பழைமை வாய்ந்தது. அதன் பழைமையை கி. மு, கி. பி கணிப்பில் மட்டிட முடியாது. பல்லாயிரம் வருடங்கள் சேர்ந்த யுகக்கணக்கில் அமைந்தது அது. மலைகள், குன்றுகள், கடல்கள், ஆறுகள், வாவிகள், குளங்கள், நகரங்கள் அதன் தொடர்பால் புனிதமாயின. உயர்தர ஓவியங்கள், சிற்பங்கள் கட்டட அமைப்புக்கள், இசை நாட்டியங்கள், இலக்கண இலக்கியங்கள், தர்க்கசாத்திரம், வானசாத்திரம், வைத்தியம், சோதிடம், முதலிய கலைகள் அதனை அத்திபாரமாகக் கொண்டெழுந்துள்ளன. அதனை எவரும் எவர் மீதும் கட்டாயமாக்கித் திணிக்கவில்லை. அன்பாலும் ஆதரவாலும் சேவையாலும் பணிவாலும் அது மற்றவரைப்பற்றிக் கொண்டது. பரந்தது.

### திருநீறு

தீவினைகள், தீயகுணங்கள் முதலியவற்றை நீருக்கி நீக்கிவிடுதல் திருநீறு. அறியாமை, அகங்காரம் முதலியவற்றை நீக்கிவிடுதலால் பசிதம். பழி, பாபம் முதலியன அணுகாமல் காப்பதால் இரட்சை. செல்வாய செல்வந் தருவதால், மேலான செல்வமாய் உள்ளதால் விபூதி.

### ஐந்தின் வகை தெரிந்த அப்பர்

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தின் வகை தெரிவான்கட்டே உலகம் என்று திருவள்ளுவர் கூறினார். திருநாவுக்கரசுநாயனார் நீற்றறையில் தண்டனை பெற்றபோது, வீணை ஓசை காதுக்கும், நிலாவொளி கண்ணுக்கும், தென்றல் காற்று மூக்குக்கும், நன்னீர்ச்சுவை நாக்குக்கும், வேனில் வெப்பம் உடலுக்கும் படவே அவர் "மாசில் வீணையும் மாலை மதியமும்" எனப் பாடியருளினார்.

---

## தன்னடக்கம்

மனம், வாக்கு, காயம் மூன்றையும் கட்டுப்படுத்துதல் தன் அடக்கம் ஆகும். அடக்கம் அமரருள் இருத்தும். பொறுமை அடக்கத்தின் ஒரு அம்சம். பொறுத்தார் அரசாள்வர். முன்னம் பொறுத்தவர் இன்னும் பொறுப்பர். தன்னடக்கம் விரதங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது, நல்லொழுக்கத்தின் சிகரம் தன்னடக்கமேயாம். அடக்கத்தால் பாவங்கள் நசியும். தன்னடக்கம் வலிமையைத் தரும். அடக்கமுடையவரைக் கடக்கக் கருதலாகாது. அறநெறிக்கும் ஆத்மீகத்துக்கும் அடக்கமே அவசியம். அடக்கத்தால் மனம் தூய்மை அடைந்து சாந்தி பெருகும்.

இனிமையான பேச்சு, இரக்கம், விஷமனமில்லாமை கோபம் இல்லாமை, துவேசம் இல்லாமை, மன்னிக்கும் மனப்பான்மை, பொறுமை, அகிம்சை, பணிவு, உபசரணை நன்நடத்தை, வாய்மை, நேர்மை, மனவுறுதி எல்லாம் சேரத் தன்னடக்கம் உண்டாகும்.

தன்னடக்கம் உள்ளவன் ஆன்மசுத்தன். அவனிருக்கும் இடம் தபோவனம் போலாகும். அவனை நாடி நல்லவர்கள் வருவார்கள்.

## ஆரோக்கிய வாழ்வுக்கு கனிகள் அவசியம்

தாவர உலகில் நாம் பெறும் திரவியம் பழங்கள் உடம்புக்கு வேண்டிய உறுதி தரும் பழங்கள் மிகவும் அதிகமானவை. மனிதன் நாடோடியாக வாழ்ந்த காலத்தில் பழங்கள் உண்டு வளர்ந்தமையும், முனிவர்கள் காடுகளில் பழங்கள் உண்டு வாழ்ந்தமையும் போதிய சான்றுகள் பழங்கள் மனித வாழ்வில் பயன் தந்தமையோடு கதைகளிலும் வந்து கருத்தாழம் காட்டுகின்றன. நெல்லிக்கனியைப் பற்றிப் பல கதைகள் உள்ளன. மாம்பழத்தைப்பற்றியும், பலாப்பழத்தைப் பற்றியும் கதைகள் வாழ்வைத்திருத்த வந்துள்ளன. ஔவையார் விரும்பிய நாவற்பழம்கூட நல்ல கதை சொல்லுகிறது. நெல்லிக்கனி அதிகமானின் தன்னலமறுப்பைக் கூறுகிறது. இன்னொரு நெல்லிக்கனி சங்கராசாரியரைக் கனகதாதா பாடச் செய்தது. கனிகள் உயிர்ச்சத்து, உப்புச்சத்து முதலிய சத்துக்கள் உள்ளவை. சில வற்றலாகிப் பலகாலம் பயன் தருகின்றன. கனிகளின் சுவைகளும் பலவிதமானவை. புளிப்பு, உவர்ப்பு, இனிப்பு முதலியன பழங்கள் தரும் சுவைகள் ஒவ்வொரு சுவையும் உடம்பில் பயன் தருகிறது சில பழங்கள் நோய் நீக்குகின்றன.

சில பழங்களில் பல சுவைகள் அடங்கியுள்ளன. மாம்பழம், தோடம்பழம், நெல்லி, இலந்தை, பலா, முந்திரிகை, வாழைப்பழம் எல்லாம் கலவையான சுவைகள் உள்ளவை. எலுமிச்சம் பழத்தின் புளிப்பும், அதன் தோலில் உள்ள கசப்பும் மிகவும் நல்லவை. வாழைப்பழத்தின் தோலில் நல்லசத்து உண்டு. அத்திப்பழம் உணவும் மருந்துமாகிறது அத்திப்பழத்தில் உலோகச்சத்து உயர்ந்தது' நோய்களை நீக்குவதற்கு அத்திப்பழம் திறமானது. அதனால் சூடு, பித்தம் தணிந்து, சளி இளகி, இருமல் நீங்கி, வாய்ப்புண் ஆறி, இரத்தம் செழித்து நல்ல சுகம் உண்டாகும். அன்னாசிப்பழம் இரத்தத்தைச் சுத்திகரிக்கும் என்பர்.

தோடம்பழம் உயிர்ச்சத்து C இன்னும் சுண்ணாம்புச்சத்து, இரும்புச்சத்து, தாதுப்பொருட்கள் எல்லாம் உள்ளது. அதன் தோலிலேயே ஒரு திறமான திரவம் உண்டு, வேண்டுமானால் தோடம்பழத் தோலை இடித்துச் சாறு பிழிந்து கற்கண்டு சேர்த்துப் பருகலாம்.

சாதாரணமான இலந்தைப்பழம் புளித்தால் என்ன இனித்தாலென்ன நல்ல பழம். அது குடலுக்கு மிகவும் நல்லது. நல்ல குளிர்ச்சி தருவது. வயிற்றுப்புண்ணை ஆற வைப்பது.

---

## தொண்டரும் தொண்டர்க்குத் தொண்டரும்

கீழ்ப்படிதல், பணிவு, விசுவாசம், நேர்மை, மரியாதை, சகிப்புத்தன்மை. எல்லா நலன்களையும் இயன்றவரைசெய்தல், எல்லா முறைகளிலும், நெறிகளிலும், இடங்களிலும் காலங்களிலும், எல்லா மக்களுக்கும் செய்தல். ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்.

---

★ கடவுள் சம்பந்தத்தால் பொருள்கள் நிலைக்கின்றன ★

## கலையார்வம்



தமிழன் கொண்ட கலையார்வம் எழுத்தில் எழுத முடியாதது. சொல்லில் சொல்ல முடியாதது. தமிழன் கண்ட கலைத்திறமையைக் கண்கள் பேசும், விரல்கள் பேசும். அங்க அசைவுகள் நெளிவுகள் எடுத்துக் கூறும். தமிழன் கண்ட அழகுக்கலை, இன்பவுணர்வுக்கலை பலவிதமானவை. அக்கலைகளுள் பரதம் என்னும் பரதநாட்டியம் பாவனை நிறைந்தது. பரதநாட்டியம் பண்டைக் காலத்தில் கோயில் வணக்கத்துக்கும் உரியதாயிருந்தது. "வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர" என்பது திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் தேவாரம். பத்தாம் நூற்றுண்டில் சிவாலயங்கள் தோறும் பண்ணேடு திருமுறையோதுவதற்கு ஓதுவாமூர்த்திகளை நியமித்த சோழப் பெருவேந்தர்கள், பரதக்கலைக்கும் பக்குவிகளான பக்தைகளான நடனசிகாமணிகளையும் நியமித்தார்கள். அந்தப் பெருமைகள் வஞந்தரவாசிகள், மிலேச்சர்கள் வருகையால் தத்தித் தடக்குண்டு தவறிப் போனபின், அண்மையில் உண்டான மறுமலர்ச்சிக் காலத்தில் பந்தணை நல்லூர் மீனுட்சி சுந்தரம்பிள்ளை என்பார் நடனக்கலையின் பழைய சம்பிரதாயங்களை நல்ல முறையில் கண்டறிந்து அருமை பெருமை வாய்ந்த சமுதாயத்தை உருவாக்குவதற்குப் பொறுப்பு வாய்ந்த மாணுக்கர் மாணுக்கியர்களைப் பழக்கியுள்ளார். அந்தப் பாரம்பரியப் பண்பாடும் பரதமும் புதிய உத்திகளோடு நாடெங்கும் பிரகாசிக்க வகை செய்கிருர்கள். ஸ்ரீமதி ருக்குமணிதேவி, ஸ்ரீமதி ஜயலட்சுமி முதலானேரின் கலைவண்ணம் மேதாவிலாசமானவை. ஜயலட்சுமி அவர்கள் 1947ஆம் ஆண்டில் பரமேஸ்வராக்கல்லூரி வெள்ளிவிழாவையடுத்த பெருவிழாவில் கலை விருந்தளித்துப் பெரும் பாராட்டுப் பெற்றவர்.

NO WASHING IS COMPLETE WITHOUT
MILK WHITE BLUE SOAP

## சிவானந்த அமுதமொழி

1. உண்மை பேசுதல் ஞானவாழ்வின் ஆரம்பம்
2. இருதய சுத்தம் இறைவன் கோயில் வாசல்
3. ஞானகுருவைப் போல் நண்பர் பிறர் இல்லை
4. சினம் போல் பகைவர் இவ்வுலகில் இல்லை.
5. துன்பம் எமது கண்களை திறக்கும் துணை
6. துன்பம் எமக்கொரு மௌன ஆசிரியன்
7. கொள்கையைக் கைவிடாதவன் நேர்மையாளன்
8. செருக்கைப் போல் தீமை எதுவும் இல்லை
9. சுத்தத்தைப் போன்ற சுகம் வேறு எதுவும் இல்லை
10. வாழ்க்கையின் மையம் மலைவிலாத்தியானம்
11. நம்பிக்கையே நம்பனைக் காட்டும் கண்
12. எந்தநேரமும் இறைவனை நினைக்க வேண்டும்
13. நற்செயல்களையே நாள்தோறும் செய்க
14. பக்தியே சாதனம் பக்தியே சாத்தியம்
15. ஆண்டவன் அருளே ஆசாரியன் உருவம்
16. ஆன்மீக வாழ்வின் அடிப்படை ஒழுக்கம்
17. பிரமச்சரியம் தெய்விக வாழ்க்கை
18. திடத்தைச் சோதிக்கச் சோதனைகள் வருவன.
19. மிகைப்படப் பேசுதல் வேலை வினைகேடு
20. உண்மைப் பண்பாடு ஊனமில் சிந்தனை
21. அன்பே வாழ்க்கையின் அறநெறியாகும்
22. ஆசை உள்ள இடத்தில் அகச்சாந்தி இல்லை
23. உணவில் சுத்தம் உளச்சுத்த சாதகம்
24. உண்மையும் ஊக்கமும் உழைப்பு உயரவழி
25. சகிப்புத்தன்மை சமாதான சாதனம்

## பல்கலைக் கழகங்கள்

ஒருகாலத்தில் எங்கள் நாட்டுக்குப் பல்கலைக்கழகம் வேண்டும் என்று தொண்டையறக் கத்தினவர் சேர். அருணசலம். அவர் பல்கலைக்கழகத்துக்கு முற்பணம் உதவவும் தயாரானுர். பல்கலைக்சழகத்துக்குத் தம்முடைய நூல்களையும் கொடுக்கத் தயாரானுர். அவர் மறைந்த பின்னரேதான் பல்கலைக்கழகக் கல்லூரி அமைந்து, லண்டன் பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்தது. அதற்கு முன் சென்ற நூற்றுண்டிலே 1857 ஆம் ஆண்டிலே சென்னை, பப்பாய், கற்கத்தா ஆகிய முப்பெரும் நகரங்களில் பல்கலைக்கழகங்கள் உதயமாயின. தமிழ்நாட்டில் சென்னையில் வந்த பல்கலைக்கழகத்தில் முதல் பட்டதாரியாய பெரியவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்து நாட்டுப் புறத்தவரேயாவர். சுதுமலை விசுவநாதபிள்ளையும், சிறுப்பிட்டி தாமோதரம்பிள்ளையும் கல்வியுலகில் கலங்கரை விளக்கங்களாயினர்.

இந்தியாவில் 125 பல்கலைக்கழகங்கள் உள்ளன தமிழ் நாட்டிலேயே சென்னை, திருச்சி, சிதம்பரம், மதுரை முதலிய நகரங்களில் தரமான பல்கலைக்கழகங்கள் உள்ளன. இந்திய பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறப் படிப்பதற்கு 5100 கல்லூரிகள் உள்ளன. இவை இன்னும் பெருகலாம். இவற்றைவிட தனியாள்களாகவும் பரீட்சை எடுக்க வசதிகள் உண்டு. சாந்துணையும் கல்லாதவாறு என்று கிழவர்களும் பரீட்சை எடுக்கிருர்கள். விழுகிழவர்கள் கலாநிதிகளாகிருர்கள்.

★ பரம்பொருளின் தன்மை ஞானமேயாகும் ★

உ

## ஊழியம் அங்கும் இங்கும்

இங்கிலாந்து என்பது ஒரு காலத்தில் ஒரு தனிப்பிர தேசம். அதில் வேல்ஸ், ஸ்கொத்துலாந்து, அயர்லாந்து காலந்தோறும் இணைந்த பின்பே பிரித்தானியா என்றும் ஐக்கிய இராச்சியம் என்றும் பெயர் பெற்றது.

பதினைந்தாம் நூற்றுண்டின் இறுதியாண்டுகளில் ஏழாம் ஹென்றி தனது ரியூடர் வம்சத்தை ஆளும் உரிமையில் நிலைபெறச் செய்வதற்கு அரும்பாடு பட்டார். அந் நிலையில் அவர் பிரபுக்களின் அதிகாரத்தைச் சட்டமூலம் குறைப்பதற்கு முயன்ருர். ஒவ்வொரு பிரபுவும் தனக்குப் பெருந்தொகையானேரைக் கையாட்களாக, ஊழியராக அடிமைப்படுத்தி வைத்திருந்தார்.

ஒருசமயம் ஏழாம் ஹென்றி மன்னனை பிரபு ஒருவர் விருந்துக்கு அழைத்தார். விருந்துண்ணச் சென்ற வேந்தனுக்குக் கோலாகலமான வரவேற்புக் கிடைத்தது. வழியெங்கும் இருமருங்கினும் பிரபுவின் ஊழியர் நிரைநிரையாக நின்று தலைவணங்கினர். அவ்வைபவத்தைக் கண்ட வேந்தன் மகிழ்ந்தாற் போல், "பிரபுவே, இவர்கள் யாவர்?" என்று கேட்டார்.

"மன்னவ! இவர்கள் தங்கள் பிரஜைகள், என்னுடைய ஊழியர்கள்" என்று பிரபு சொன்னதும், "ஐயனே! தங்கள் உபசரிப்புக்கு நன்றி. நான் விதித்த சட்டத்தை எனக்காக தவிர்க்க முடியாது. தங்களுக்குத் தண்டனை விதிக்க தயங்கமாட்டேன்" என்று கூறிப் பெருந்தொகையான பொன் இறுக்குமாறு கட்டளையிட்டார். அது நிற்க.

இலங்கையில் ஒல்லாந்தர் ஊழியமுறையினை புகுத்தினூர்கள். யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஏறக்குறைய 700 ஊழியர் ஒல்லாந்த அதிபருக்குப் பணிவிடை புரிந்தனர். பல்லக்குச் சுமத்தல், யானைக்குத் தீனி கொடுத்தல், மரந்தறித்தல், சாமான்களைத் தோளிலும் தலையிலும் சுமத்தல், தென்னை நடுதல், நீர் ஊற்றுதல், குற்றேவல் செய்தல் முதலியன ஊழியர் கடமைகளாயிருந்தன.

## எல்லோரும் ஏறமுடியாத முரட்டுக் குதிரையில் சிறுவன் ஏறிச் சவாரி செய்தான்!

அடேயப்பா! என்று பல்லாயிரவர் பார்த்து நிற்பப் பச்சிளம் பாலன் ஒருவன் பென்னம் பெரிய பஞ்சலட்சணக் குதிரையிலே ஏறி உல்லாசமாகச் சவாரி செய்தான். மசிடோனியா நாட்டிலே பிலிப் மாமன்னர். அவருக்குக் குதிரைப்படையில் பெருவிருப்பம். நாள்தோறும் நல்ல குதிரைகளை வாங்கி வந்தான்.

ஒருநாள் ஒரு வணிகன் பெரிய குதிரையைக்கொண்டு வந்தான். அது அலங்காரமாக அணிநடை நடந்தது. அழகானது, அது திடீரெனத் துள்ளிப் பாய்ந்து எவரையும் ஏறவிடாது உதறித் தள்ளியது.

கொண்டோடு அந்த முரட்டுக் குதிரையை: அதை என் கண்ணில் காட்டாதே என்று மாமன்னர் கோபித்துக்கத்தினர்.

"அப்பா" என்ெருரு குரல். அருமையான குதிரையை அவசரப்பட்டு இழக்காதீர்கள்!

மாமன்னர் திரும்பிப் பார்த்தார். தம்முடைய பாலப் பருவமைந்தன். "அஸ்வசாத்திரம் அறிந்த அனைவருக்கும் தெரியாத நுட்பம் உனக்குத் தெரியுமா! என்று கேட்டார்.

"ஆம் அப்பா"

இவ்வாறு கூறிய பாலன் மைதானத்துக்கு விரைந்து சென்று கடிவாளத்தைப் பற்றி இழுத்துக் குதிரை மேலே பார்க்கும் வகை செய்தான். அதன் காதில் ஏதோ சொல்லும் பாவனையில் தன் முகத்தை வைத்து முட்டிவிட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, உல்லாசமாயிருந்து சவாரி விட்டான். ஒரு வட்டம் போய்வந்து இறங்கியதும், அங்காந்தவாயோடு பார்த்திருந்த மாமன்னர், "மகனே இந்த நாடு உனக்குப் போதாது. நீ பெரிய நாடுகளைப் பிடி" என்று வாழ்த்தினூர். அவர் அந்த முரட்டுக்குதிரை தன் நிழலைக்கண்டு வெருண்டு துள்ளியதை அறியவில்லை.

அந்தப் பாலன் வேறு யாருமில்லை. மகா அலெக்சாண்டரான அவனே தான். நாடுகள் பிடித்து உலகத்தையே ஆளவிரும்பிய அவன், பாரதநாடு மீதும் படை எடுத்தான். வடக்கில் புருசோத்தமன் எதிர்த்தான். கடும் யுத்தம். மழை பெய்து வெள்ளம் பாய்ந்து ஆறு பெருகிச் சேறு ததும்பியது. புருசோத்தமனின் ஆனைப்படை சேற்றில் நடக்க முடியாது தவித்தது. துள்ளிப் பாய்ந்து சென்ற குதிரைப் படையைச் செலுத்திய அலெச்சாண்டருக்கு வெற்றி கிட்டியது. புருசோத்தமன் கைதியானுன். பாசறையில் அலெச்சாண்டர் முன் நிறுத்தப்பட்ட புருசோத்தமனை நோக்கி, "போறஸ்! உன்னை நான் எவ்வாறு கருதவேண்டும்?" என்று கேட்டான். "என்னை நீ சக்கரவர்த்தி எனக் கருதவேண்டும்" அலெச்சாண்டர் உள்ளம் உருகி அவரை உபசரித்து மதிப்பாக விட்டு, அரசாள வைத்து மீண்டான். புருசோத்தமனைப் போறஸ் என்ன கிரேக்கரின் வாய் சிந்துநதியை இந்து என்றது. இந்து நதிக்கப்பால் உள்ள இடம் இந்தியா எனலாயிற்று. கடல் இந்துசமுத்திரமாயிற்று. பழைய பெயர்கள் மனறந்து விட்டன!

## நீ விரும்பினுல்

நீ விரும்பினுல் என்னதான் செய்ய முடியாது. விருப்பத்தால் துணிவு உண்டாகும். துணிந்தால் செய்வது சாத்தியமாகும். ஒருவர் பாடினூர் நீ விரும்பினுல் என்று.

எழுத விரும்பினுல் உன்பிழைகளை எழுது
பேண விரும்பினுல் உறுதிமொழியைப் பேண்
பண்படுத்த விரும்பினுல் பழக்கங்களை பண்படுத்து
வாசிக்க விரும்பினுல் நல்லநூல்களை வாசி
கொல்ல விரும்பினுல் அகந்தையைக் கொல்
விதைக்க விரும்பினுல் அன்பை விதை
சாக விரும்பினுல் நாட்டுக்காகச் சா.

— குரு. தே. பகதூர்.

★ கடவுள் குறையெதுவுமில்லாப் பரிபூரணர் ★

SITHY ... WEST CHUNNAKAM

## நெக்ரை

ஒரு காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சி அதிகாரம் பெற்றிருந்தவேளையிலே அரசாங்க ஊழியர்களும், வர்த்தக வங்கி ஊழியர்களும் காற்சட்டை, மேற்சட்டை, கோட், சப்பாத்து எல்லாம் அணிந்து, கழுத்தைச் சுற்றி ரை என்னும் பட்டியும் கட்டித் தொங்கவிட்டு, மேலும் அதற்குப்பொன்னூசி குத்தித் தங்களை அலங்கரித்துக் கொண்டனர். உடலுறுப்புக்களில் கழுத்து மிகவும் சுறுசுறுப்பான பகுதியாம். அரசாங்க திணைக்களங்கள், வங்கிகள், புகையிரதநிலையங்கள், தபாற்கந்தோர்கள் ஆகிய இடங்களில் கடமையாற்றியோர், ரிப்ரொப்பாக போகவேண்டியிருந்தார்கள்.

ஒருகாலத்தில் கொழும்பில் தேஸ்ரன் வீதியில் இருந்த அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில், விடுதி மாணக்கராகவே எல்லோரும் தங்குதல் வேண்டும் என்பதோடு, சாப்பாட்டு மேசையிலும் ரை கட்டியே உணவு கொள்ள வேண்டும். அது கட்டாய நிபந்தனை. எவரும் எக்காரணம் கொண்டும் மீறமுடியாது.

இப்பயிற்சி விசேடத்தால் பலர் இறுதிக்காலம் வரை, வீட்டைவிட்டு வெளியேறும் போதெல்லாம் ரை கட்டியே சென்றார்கள். உதாரணத்துக்கு ஒருவரைக் கூறின் உரும்பராய் கே. வி. மயில்வாகனம் அவர்கள், சந்தையில் மரக்கறி வாங்குவதற்கும் ரை கட்டிப் போனார்கள். இறுதி நாள்வரை ரையை விடவில்லை.

இத்தகைய புகழ் பூத்த ரை வெள்ளைக்காரர் இங்கே கொண்டு வந்தபோதிலும் அவர்களும் இரவல் வாங்கியவர்களேயாவர். அவர்கள் பிரெஞ்சுக்காரர் கைவிட்ட பின்னரும் தாம் கைவிடாமல் காப்பாற்றியவர்கள்.

இங்கிலாந்தில் ரை கட்டுவது மேல்தர மக்களின் அடையாளமாகவும் நிலவியது. ஒரு காலத்தில் ஆங்கிலேயருள் ஆண்கள் தங்கள் தலைக்கு மேல் இரவல் மயிர்த் தொகுதியை அப்பித்திரிந்ததும் உண்டு. அது காதுகன்னம் பிடரி எல்லாம் மறைத்து உம்மாண்டிக்கோலம் காட்டியது.

இஃது இவ்வாறாக எங்கள் மதிப்புக்குரிய ஒறேற்றர் சுப்பரமணியம் ஐயா, பெரிய கல்லூரியை நடத்திய பெருமை ஒருபுறமாக, அவர் தென்னிலங்கையில் ஆங்கிலேயர்மயமான பெரிய கல்லூரியிலே எவருக்கும் அடிபணியாமல் வேட்டி சால்வை வெள்ளைச் சட்டை தரித்து உலாவியவர். பெரியவர்கள் சுட்டிக்காட்டியும் காதில் வாங்காது தம் நாகரிகத்தைக் கைவிடாது காத்து வந்தவர். இன்றும் அதே கலையில் உலாவுகிறார்.

வேகாவெயிலில் கழுத்துக்கு ரையும் கட்டி வாயில் நெருப்புக் கொள்ளியும் கொண்ட அரச உத்தியோகம் இன்று அற்றுவருகிறது. சில பெண்கள் காற்சட்டை, மேலே சர்வாணிபோல நீண்ட சட்டை அது மெய்ப்பையுமாகலாம், அதற்கு மேலே ஒரு போர்வை, அது சால்வை போலவுமாகலாம். இத்தனை நமக்கு வேண்டும் என எழில் கூட்டி உலா வருகிறார்கள். இக்கோலம் கோயில்களுக்குள்ளும் புகுகிறது. கொடி மரத்தடியிலும் நிற்கிறது.

## சிங்கப்பூர்

சிங்கப்பூர் உத்தியோகம் சென்ற நூற்றாண்டிலும், இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் தமிழர் வாழ்வில் பெரிய மறுமலர்ச்சியை உண்டாக்கியது. அவர்களை வாழவைத்தது. சிங்கப்பூர் எனக் கூறினாலும் அயலில் உள்ள பெருநிலப் பரப்பாய மலாயாவையும் குறித்தது. இன்று இவை வெவ்வேறு நாடுகள்.

சிங்கப்பூர் மிகவும் சிறிய நாடு. இது 26 மைல் நீளம் 14 மைல் அகலம் உள்ள அழகிய தீவு. சிங்கபுரம் என்பது சிங்கப்பூராய் விட்டது. இது காடாய்க் கிடந்த காலத்திலேயே இதனைத் தமிழர் கண்டு வளம்படுத்தினார்கள் என்பது இனிமேல் வரலாற்றில் விளக்கமாக எழுதப் பெறலாம். தமிழ்நாட்டிலிருந்து நெடுந்தூரம் ஆழ்கடலில் சென்ற தமிழன் அடுத்த வளவான ஈழத்தை அறியாமல் இருந்திருக்க மாட்டான். தேங்காய் பறிக்கவும், தேயிலை கிள்ளவும், றப்பர் பால் எடுக்கவும் வந்த இனம் என்று படிப்பிக்கமுயன்ற இனம் ஒன்றுஇன்று நல்லபாடம் படித்திருக்கிறது. தமிழன் என்றொரு இனம்உண்டு என்றுஉலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் பறைசாற்றிவிட்டன. இன்று 55 பல்கலைக்கழகங்களில் 37 நாடுகளில் தமிழ் ஆராயப் பெறுகிறது. ஐக்கிய நாடுகள் தமிழ்ப் பெருமையைத் தமிழ்க்கூரியர் சஞ்சிகையில் வெளியிடுகிறது.

நாளடைவில் ஸ்ரீரேட்ஸ்டியெஸ்ற் என்னும் வாசகர் திரட்டும் தமிழில் வரலாம்தானே. அது தானே வரும். சிங்கப்பூரில் தமிழுக்கும் சமவுரிமை உண்டு. தமிழ் மந்திரிமாரும் உள்ளனர். சிங்கப்பூர் போய் வந்தவர்கள் நாட்டின் தூய்மையைக் கூறிவியக்கிறார்கள்.

கச்சான் கடலைக்கோது, ஐஸ்கிறீம் தண்டு, கரும்புச் சக்கை, வெற்றிலைத்துப்பல், சிகறெற் கட்டை, நெருப்புக் குச்சி எதுவுமே எங்கும் இல்லையாம். வாய் நிறைய வெற்றிலை குதப்பிய யாழ்ப்பாணத்து ஐயா ஒருவருக்கு ராக்சியில் ஏறமுடியவில்லையாம். இவர் ஏறிப் பொழிச் என்று வீதியில் துப்பினால் யார் அதற்குப் பொறுப்பு. சுத்தத்துக்குத் சுதந்திரம் முதலில் வழங்கவேண்டும்.

சின்னஞ்சிறிய சிங்கப்பூர் பெண்ணம் பெரிய துறைமுகம் பதினைந்து நிமிடத்துக்கொரு கப்பல் வருவதும் போவதுமாயிருக்குமாம். மிகநவீன விமானத்தளம் இருக்கிறதாம். நிமிடத்துக்கொரு விமானம் வருவது போவது புறாக்கூட்டிலும் காணமுடியாத சம்பவம். ஆண்டுதோறும் சராசரியாக ஒருகோடி மக்கள் சிங்கப்பூரைக் கண்டு போகிறார்களாம். நூறு வங்கிகள் நன்றாக இயங்குவதால் தென்னாசியாவில் சிங்கப்பூருக்குப் பொருளாதாரவரலாற்றுப் புதுமையும் உண்டு. சின்னஞ்சிறிய இடப்பரப்பில் வானமளாவும் மாடிக்கட்டிடங்கள், மணங் கமழும் பூஞ்சோலைகள், பாடசாலைகள் எல்லாம் உள்ளனவாம். இருபத்தேழு ஆண்டுகளுக்கு மேலாக வழிநடத்திச் செல்லும் லீகுவான்யூ மனிதனா தேவனா?

சிங்கப்பூர் இன்று கப்பல் கட்டுவதிலும் திருத்துவதிலும் புகழ் பெற்றுள்ளது. மனிதரை வெகுவாகத் திருத்தி அமைதி காணும் வழியில் அமைதிப் பிரதேசமாய் நிலவுகிறது. அது வாழ்க!

★ வாழ்க்கையின் நோக்கம் பரம்பொருளை அடைதலேயாம் ★

## பெரியவர் ஒருவரின் உபதேசம்

வீட்டிலாயினும் வேலைத் தலத்திலாயினும் நீ என்ன செய்ய முயன்றாலும் முதலில் இறைவனை வணங்கி, உன்னை முற்றாக ஒப்படைத்து விட்டு வேலையைத் தொடங்கு.

எந்த வேலையைச் செய்தாலும் முற்றாக முழுமனத்தோடு நேர்மையாக உன் வேலையைச் செய், நேர்மை உடனடியாகப் பயன்தராவிட்டாலும் நாளடைவில் பயன் தரும். ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளில் ஈடுபடாமல், ஒவ்வொன்றாக இரண்டையும் நிதானமாகச் செய். ஒரு கல்லால் இரு பறவைகளை விழுத்தப் போனால் ஒரு பறவையும் விழமாட்டாது.

நீ வேலை செய்யும் தொழிலகத்தின் புகழையும் தரத்தையும் பெருமையையும் கெடுத்துவிடாமல் உன்னால் முடிந்த அளவு மனச்சாட்சிக்குப் பிழையில்லாமல் வேலை செய். மிகக் குறைந்த செலவில் மிகக் கூடிய பயன் பெறக் கூடியதாக நீ வேலை செய்தல் வேண்டும் என்பதை உன் கோட்பாடாகக் கொண்டுநட.

ஒத்துழைப்பு, கீழ்ப்படிவு என்பன இன்சொல்லாலேயே பெறக்கூடியவை. எதையும் உரியவேளையில் செய்து முடிக்கப்பார். இன்று செய்ய வேண்டியதை நாளைக்குச் செய்யலாம் என்று பின்போடாதே.

ஏதாவது முறையில் மற்றவரைத் தாக்கிப் பேசுவதாயிருந்தால் பலமுறை யோசித்துப் பேசு அல்லது செய்.

## ஒன்றுக்கு ஐந்து

அன்று க. மு. செல்லப்பா என்பவர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் செயலாளர். செக்றறறி என்னும் பதவி சக்கடத்தார் என வழங்கியது. செல்லப்பா அவர்கள் கந்தமடத்தில் குத்தகைகாரன் சபாபதியார் பெயரால் வழங்கிய குத்தாறன் வளவில் 1934 ஆம் ஆண்டில் 15 ரூபாவுக்கு வீடு வாடகைக்கு எடுத்துத் தனிமையாக வாழ்ந்தவர்.

வாசிப்பதே பொழுது போக்காகக் கொண்ட அவர் கந்தமடத்து இளைஞர்கள் சிலரை அழைத்து வாசிக்கப் பழக்கினர். இராசரத்தினம், கேதீஸ்வரநாதன், தனபாலசிங்கம், கனகசபை, தம்பு, சண்முகநாதன், குலரத்தினம் ஆகியோர் வாசிக்கத் தொடங்கினர். ஒரு சிறு வாசிகசாலை ஆரம்பித்தது. வளர்ந்தது. பொதுசன நூல்நிலையமாக மலர்ந்தது. தென்னிலங்கையர் தீயிட்டனர். நூல்களை ஆகுதி செய்தனர்.

உதிர்ந்த இலைகள் உரமதாகும். வெந்த சாம்பல் பசளையாகும். சங்காரம் படைத்தலுக்கு அத்திபாரம் ஒன்று அழிய ஐந்து நூல் நிலயங்கள் எழுந்தன. இன்னும் கிளைகள் கிளைக்க வேண்டும் என்று ஆணையாளர் சிவஞானம் அரிதின் முயன்று வருகிறார். பழைய அழிவில் புதிய பொலிவில் பொதுசன நூலகம் பூத்து மலருமாம். நூல் நிலயங்கள் ஐந்து அல்லது ஐம்பது மலர்ந்தாலும் தேன் பருக வண்டுகள் பறந்து வரும். இந்தியாவில் 60,000 நூலகங்கள் இருக்கின்றன. அறிந்து கொள்ளுங்கள்.

## வெண்மைப் புரட்சிக்கு மூலம்

வேளாண மாந்தர் அன்று வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்களைக் கண்டவர்கள். அதிகம் கறக்கும் பசுவினங்கள் இன்றும் தமிழ் நாட்டில் கோவையில் உள்ளன. நாள்தோறும் இருபத்தைந்து லீற்றர் கறப்பவை வள்ளற் பசுக்கள். கால்நடைச் செல்வம் இன்று இந்தியாவின் பெருஞ் செல்வம். அது வேளாண்மைக்குத் துணையானது. எருதுடையான் வேளாளன் என்று நான்மணிக்கடிகை கூறுமளவில் எருது கால்நடைச் செல்வமே. வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணமாட்டாதான் என்று திரிகடுகம் கூறுமளவில் வீட்டுப்பசு விருந்துக்கு உதவியாயிருந்தது. உழவுத் தொழிலுக்கு எருதுகளே முதலிடம் பெற்றவை. நன்றாகப் பழக்கப்பட்ட மாடுகள் எல்லா வேலைகளையும் செய்யும். அக்காலத்தில் மருத நிலத்தில் மேச்சல் தரையும் இருந்தன மருத நிலத்தில் விளைவு அதிகம். விளைவின் பெருக்கத்தால் வண்டிகளில் தானியங்கள் ஏற்றப்பட்டு வரிசையாக நகர்ந்தன. "என்னும் ஏனலும் இறுங்கும் சாமையும் கொள்ளும் கொள்ளையில் கொணரும் பண்டியும்" என்பது கம்பராமாயணம். பண்டிகள் என்றால் வண்டிகள். வண்டிகளை இழுக்கும் மாடு வயல் உழுது வரும் மாடு பாரதியாரையே பரவசப் படுத்திவிட்டது.

## ஔவையார் ஊக்கிய உழவு

பூமி திருத்தி உண், நெற்பயிர் விளை, அஃகம் சுருக்கேல், போனகம் என்பது தானுழந்தூட்டல், அஃகமும் காசும் சிக்கெனத்தேடு, மேழிச் செல்வம் கோழைபடாது, சீரைத்தேடின் ஏரைத்தேடு, தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது. இவ்வாறெல்லாம் பாடிய ஔவையாரின் முந்திய மூத்த பழைய ஔவையாரும் வரப்புயர என்று பாடி வாழ்த்தியுள்ளார்.

**புதிய ஆத்திசூடி போற்றிய உழவு**

பூமி இகழ்ந்திடேல்<br>
மேழி போற்று<br>
விதையினைத் தெரிந்திடு

**பாரதிதாசன் பாடிய உழவு**

"விடியுமுன் எருதின் வால் அடிபற்றிப் பகல்<br>
முடிவினில் எருதின் முதுகில் சாய்ந்து<br>
வருங் குடியானவன்"

## நுரையீரல் போதா

நமக்குள்ள உள்ளுறுப்பான நுரையீரல் இரத்தத்தைச் சுத்திகரிப்பது. அது வெறும் காற்றைக் கொண்டே அந்த மகத்தான வேலையைச் செய்கிறது. தூயகாற்றைத் தயாரிப்பது மரம்தான். மக்கள் பெருகிப் பெருகிச் சதா மூச்சு விட்டுக் கரியமலவாயுவை அதிகம் கழிக்கக் கழிக்க, அதனைச் சுத்திகரிப்பது மரம். தனிமரம் தோப்பாகாது. பல மரங்கள் வேண்டும். மரம் செய்வதை மனிதன் செய்யமாட்டான். மரத்தால் பலவித நன்மைகள் உண்டாகும். மரங்கள் நடுவதாயின் மில்க்வைற் தொழிலகத்தை நாடுங்கள்.

★ அநித்தியமான பொருள்கள் துக்கத்தையே தருவன ★

உ

# முத்தாயர்



எத்தாயரிலும் சிறந்தவராயும், எங்கள் மீது பேரன்பு கொண்டவராயும், எங்கள் வளர்ச்சியில் கண்ணும் கருத்தும் உள்ளவராயும் அருவமாயிருந்து அருள்பாலிக்கின்றவர் மூவர் எங்கள் பெருந்தாய்மார். ஆன்மவளர்ச்சியில் முதல் ஆண்மை என்னும் வீரம்வளர வேண்டும். பெற்றதாய் தருகின்ற தாய்பபால பாரம் தாங்கும். அது உலகிலுள்ள தகரப்பால்களிலும் பார்க்க மேலானது, உறுதியானது. இங்ஙனமே எமக்கு வீரமளிப்பவள் ஒருதாய். அவளை நம் முன்னோர் கொற்றவை என்றும், துர்க்கை என்றும். மலைமகள் என்றும் வாழ்த்தி வரம் பெற்றனர். அவளைப் போற்றிசைப்பதற்குப் புலவர்கள் பாடுமுன்பே, எழுத்தறிவில்லாத எம்மவர் ஏத்தியும் கூத்தாடியும் வழிபட்டனர்.



வாழ்வு மலரச் செல்வம் வேண்டும். செல்வம் என்பது சிந்தையின் நிறைவு. அது பணம், பொன், பொருள் என நாம் குவிப்பன அல்ல. உண்பதற்கும் உபகரிப்பதற்கும் பண்டைநாளில் என்ன என்ன தேவையாயிருந்தனவோ அவையே எனக. கிழங்கு, தேன், பால், தானியம் எல்லாம் செல்வம். தனக்குப் பின் தன்னைத் தாங்க பிள்ளைகள் வேண்டும். பிள்ளைச் செல்வம் பெரிய செல்வம். செல்வந்தருவதற்த அந்த ஆதி சக்தியே அலைமகள் எனவும் லட்சுமி எனவும் நின்றாள்.



வலிமையும் செல்வமுப்பெற்றவர்கள், தங்களுக்கு எப்படி வாழ வேண்டும் என்னும் நெறியைக் கூறும் கல்வி என்னும் வித்தை வேண்டும் என்று கண்டனர். கல்வி வித்தையாக நிலவும்போது பலவித கலைகளாக மலரும். கலைகளுக்கெல்லாம் சாரணியாக உள்ள ஒரு பூரணியே கலைமகள், நாமகள், சரஸ்வதி, புத்தகத்தின் மாது என்றெல்லாம் கண்டனர். அவள் ஏடங்கை நங்கையாய் இருந்தவள். இன்றும் தனது திருக்கரத்தில் ஏடு ஏந்திய வண்ணம் எழுந்தருளியுள்ளார்.

இவ்வாறாக வீரம், செல்வம், வித்தை என்னும் மூன்றையும் உவந்து உபகரிக்கின்ற தெய்வ வடிவங்களாக முறையே துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூன்று மூர்த்தங்களை வணங்குவராயினர். வணங்கி வருகிறார்கள் வணங்கி வாழ்வார்கள்.

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டுக்கும், மக்களுக்கும் பயனுள்ள
நற்பணிகளுக்கே உதவுகிறது.

# விஜயதசமி ஏடு தொடக்குதல்

இம்முறை எமக்குப் பல்லாயிரக் கணக்கான ஓலைச் சார்வுகள் தேவை. தாங்கள் எங்கள் இலவச ஏடு விநியோகப்பணிக்குக் கைகொடுத்தல் வேண்டும். தாங்கள் இலவசமாகவேனும், விரும்பினால் விலைக்கேனும் பனையோலைச் சார்வுகள் தந்துதவுங்கள்.

நாங்கள் தமிழ் கூறும் பிரதேசம் எங்கும் ஏடுகள் வழங்கி வருவதைத் தாங்கள் அறிவீர்கள் தானே! எங்கள் விற்பனை வாகனங்கள் அரிவரி மட்டைகளையும் ஏடுகளையும் கட்டுக்கட்டாக ஏற்றிவந்து இலவசமாக விநியோகம் செய்யும்போது நீங்களும் கைகொடுத்தல் நல்லதுதானே.

இம்முறை ஏடுகள் தேவையானோர் முன்கூட்டியே விண்ணப்பியுங்கள். தங்களுக்குத் தனிப்பட்ட முறையில் தேவையானால் தயவுசெய்து விலாசமிட்ட நீட்டு என்வலப் முத்திரையொட்டி அனுப்புங்கள். தொகையாகத் தேவையானோர் கவனிக்கவும். மட்டக்களப்பில் கல்லடி உப்போடை இராமகிருஷ்ணமடம், திருக்கோணமலை தொண்டர் நடத்தும் அருள்நெறி மன்றம், மயூரன் புத்தகசாலை. வவுனியா சுத்தானந்தமன்றம். கிளிநொச்சி மகாதேவசுவாமிகள் மடம், கொழும்பில் கற்பகம், 244 காலி வீதி கொழும்பு 4. காலியில் சிவன்கோயில், கண்டியில், இந்துமாமன்றம் மன்னார் செம்வம் பிரதேஸ் மாத்தளையில் முத்துமாரியம்மன் கோயில், ஹட்டனில் முருகன் தேவஸ்தானம், நுவரேலியாவில் காயத்திரி தேவஸ்தானம் கம்பளையில் இந்துமாமன்றம் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

# இந்துநாகரிகம் வளர்த்த பெண்கள்

சனாதன தர்மமான இந்துப் பண்பாட்டில் ஊறி உருவாகி உய்தியடைந்த பெண்கள், தாமே இந்துநாகரிகத்தை இல்லறத்தில் இருந்தும் வளர்த்திருக்கிறார்கள். அவர்களின் தாய்மைக்குணம இருந்தவாறு!

கார்க்கி, மைத்திரேயி, அனுசூயா, அருந்ததி, அகல்யா, தேவயானீ, குந்தி, பிருந்தா, மண்டோதரி, தமயந்தி, சாவித்திரி, சீதை, சர்மிஷ்டை, லோபாமுத்திரை, சத்தியவதி, சுகன்யா முதலானோர் வழியில், புனிதவதியார், திலகவதியார், மங்கையற்கரசியார், பரவையார், சங்கிலியார், திருவெண்காட்டுநங்கை முதலானோர் இந்துப்பண்பாடறிந்தவர்கள்.

# தேசம் உய்யவந்தவர்

மக்களின் மனவிருளை நீக்கி, அவர் தம் மனத்திறனை ஒளிபெறச் செய்து. அவர் தம் வாழ்வைச் சீர்திருத்திப் புனிதமாக்கிய புண்ணிய சீலர், புண்ணியக்கண். எழுச்சிக்குரிய பெரிய வீரர், அமைதிப் புரட்சியாளர், சீர்திருத்தக்காரர், உழவாரப் படையாளி, தொண்டலல்லால் துணையுமில்லை என்றும் என் கடன் பணிசெய்து கிடப்பதே என்றும் கோட்பாடு கொண்டவர், தயாமூல தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலம் கொடுத்த பெருங் கொடையாளி, பஞ்சம் நீக்கிய பரமஞானி உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம்செய்து அகிம்சை என்பன காட்டியவர், அப்பர் என்னும் திருநாவுக்கரசுநாயனார் அவரைத் தேசபிதா என்பர்.

★ மனத்தை இறைவனிடம திருப்பினால் சுகதுக்கம் ஒழியும் ★

உ



## யோகம்

யோகம் நம்மை இறைவனோடு இணைக்கும் சூக்குமமான பாலம். சரியைத் தொண்டு, கிரியைத் தொண்டு வளர யோகமனப்பான்மை உண்டாகி, அதில் முறுக்கேற ஞானம் உண்டாகும். ஞானம் பெறுவதற்கே பெரியவர்கள் காடுகள் குகைகள் எங்கும் தேடி முனிவர்களை அடைகிறார்கள்.

யோகம் இறைவனோடுள்ள இணக்கம். அதுவே வாழ்வின் இலட்சியமும் ஆகும். யோகத்தால் ஒருவன் உடம்பையும் உள்ளத்தையும் திருத்துகிறான். யோகத்தால் காட்சிகள் காண்கிறான். யோகக்காட்சி இறைவனைக் காணும் காட்சியை உண்டாக்கும்.

உடலை, பொறிகளை, மனத்தை அடக்குதல் யோகம். யோகம் கைவந்தவர் யோகர். யோகத்தால் மனம் தெளியும். மனஅலைகள் அடங்கும். மனம் அடங்க இறைவன் காட்சி உண்டாகும். யோகத்தால் தேக ஆற்றல், மனத்திண்மை, உளச்சாந்தி எல்லாம் உண்டாகும். யோகத்தால் ஒருவன் பூரண மனிதனாகிறான்.

யோகத்திற்கு ஆண்மை, வீரம், விடாமுயற்சி, பொறுமை, தீவிரவிருப்பம் எல்லாம் தேவை.

பதஞ்சலி முனிவர் இயற்றியநூல் யோகசூத்திரம். அது இராஜ யோகத்தைக் கூறுவது. அது அட்டாங்க யோகம்.

அட்டாங்கம் என்பது எட்டு அமைவுகள். அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாம்.

## நூறு நாள்கள் நடைபெறும் நூற்றாண்டுவிழா

சிவானந்த மகானின் நூற்றாண்டு விழா சென்ற யூன் முதல்நாள் தொடக்கம் இன்று 8-9-87 வரை நூறுநாள்கள் விமரிசையாக நடைபெறுகிறது.

பாரத அரசு அவரின் நினைவாக இரண்டு ரூபா பெறுமதிவாய்ந்த முத்திரையும் வெளியிட்டுள்ளது. பாரத நாட்டின் பெருநகரங்கள் தோறும் பீடுபெறவமைந்த தபோவனங்கள், நினைவு மண்டபங்கள், நிலையங்கள் தோறும் நிகழ்ச்சிகள் நிரம்பிய விழாக்கள் நடைபெறுகின்றன.

சென்ற காலத்துப் பழுதிலாத் திறத்தை இந்தநாள் வாழ்நருக்கு பக்தி பூர்வமாக பண்பாட்டு மூலதனமெனப் பேணிக் காத்துப் பேசியும் எழுதியும் போதித்தவர் சிவானந்தர்.


சிந்தனையை வெளியே போகவிடாது உள்ளே குவித்து இறைவனுக்குக் குகைக் கோயிலமைத்துப் பேரின்பங் காணலாம் என்று போதித்தவர் சிவானந்தர்.

“ஓம் நமோ பகவதே சிவானந்தாய” என்னும் பஜனையொலி இமயமெங்கும் எதிரொலிக்க, கங்கை பிரவாகம் போல மக்கள் கூட்டம் அணியணியாக ஆடம்பரமெதுவுமில்லாமல் திரள விழா நடைபெற்றது. ஒன்பது நாள்கள் இராமாயண கதாகாலட்சேபம் உருக்கமாக நடைபெற்றது.

பாகவத கதை காலட்சேபம், இராமாயண பிரசங்கம் ஒவ்வொரு புறம். “ஓம் நமோ நாராயண” என்னும் மந்திர உச்சாடனம் ஒருபுறம். மறுபுறம் மகா மிருத்தியுஞ்ஜயமந்திர வொலி மக்களை அமைதி காணவைத்தது.

எங்கும் பிரார்த்தனைகளும் பஜனைகளும் உலக நன்மை கருதியே நடைபெற்றன. சுற்றுலாவுக்கு வந்த வெளிநாட்டவர் பலர் இத்தகைய பக்திப் பெருவிழாவில் தாமும் கலந்துகொண்டனர். எல்லோரும் தாங்கள் “பற்றிசார்ச்” பக்தியேற்றம் பெற்றதாகக் கருதினர். பக்தியலை மின்சாரம் போல எங்கும் ஒளியூட்டியது, உணர்ச்சியூட்டியது.

இன்று வடக்கில் புகழ்பெற்ற பெரியவர்களாய மகாமண்டலேஸ்வரா என்னும பெருந்தவத்தினரும், சுவாமி வித்தியானந்தகிரி மகாராஜ் என்னும் கைலாய ஆச்சிரமப் பெரியவரும் மக்களுக்கு காட்சி தந்து கருத்துரை வழங்கிக்கருணை பாலித்தார்கள்.



சிதானந்தர்

ரிஷிகேசத்துப் பெருந்தலைவராயுள்ள சுவாமி சிதானந்தர் எல்லாவற்றையும் நன்கு பரிபாலித்து வழிநடத்தியுள்ளார்.

அவரே எங்களை முன்னர் அங்கழைத்து எமக்கு வேண்டிய வசதிகள் யாவற்றையும் செய்து தந்தவர். இம்முறையும் அங்கு வருமாறு அவர் அன்புடன் அழைத்துள்ள போதிலும், பலவித வசதிக் குறைவுகளைக் கருதி நாங்கள் போவதற்குத் தயங்கினோம். எங்கள் உள்ளம் அங்கேயே சிலநாள்கள் தங்கி மீண்டது.

★ பொறிகளைப் புலன்களினின்றும் மீட்டல் வேண்டும் ★



## ஆத்திசூடி

ஆத்திசூடி என்பது ஔவையார் செய்த நீதிநூல். தமிழ்ப்பிள்ளைகள் இளமையிலே நீதிகளை அறிதல் வேண்டும் என்பது ஔவையாரின் விருப்பம். அதனாலே தான் அவர் சிறுவர் விளங்கிக் கொள்ளும் வகையில் ஆத்திசூடியைப் பாடினார். இரண்டு சொற்கள், மூன்று சொற்கள், நான்கு சொற்கள் என்னும் அளவுக்குள் ஆத்திசூடி அடங்கியுள்ளது.

ஆத்திசூடி சிவபெருமான், பிள்ளையார், திருமால் முதலிய தெய்வங்களை நினைக்கச் செய்வது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உண்மைப் பொருள்களை உணரச் செய்வது.

அறம் செய்ய விரும்பு. இதில் அறம் என்னும் தர்மத்தின் பெருமையைக் கூறுவர். பொருள்தனைப் போற்றி வாழ். இதில் செல்வத்தின் சிறப்பைக் கூறுவர். மெல்லியலாள் தோள் சேர். இதில் இல்லறம் நடத்துதலின் பெருமையைக் கூறுவர். வீடு பெறநில் என்பதில் மோட்சம் என்னும் இன்பத்தை அடைவதற்கு அறம் பிசகாமல் வாழ் என்று கூறுவர்.

சிறுவர் சிறுமியர் ஆத்திசூடியில் வரும் 108 வரிகளையும் மனப்பாடமாக்குதல் வேண்டும். இதற்காக மில்க்வைற்தொழிலதிபர் பல்லாயிரக்கணக்காக இந்நூலை அச்சிட்டு இலவசமாகக் கொடுக்கிறார். இந்நூலில் கருத்துரையும் ஆங்கில மொழி பெயர்ப்பும் உண்டு அன்றி ஆத்திசூடி, கொன்றை வேந்தன் பாடமாக்கியவர்களுக்கு அரிய பரிசுப் பொருட்களையும் தொழிலதிபர் வழங்குகிறார்.

## இரண்டு நாள் பெருவிழா

யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் 7-9-87, 8-9-87 திங்கள், செவ்வாய் நாள்களில், முழு நாள் விழாவாக சிவானந்தசோதி நூற்றாண்டு கொண்டாடப்பெறும். சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், பக்திப்பாட்டுக் கச்சேரிகள் நடைபெறும். இருமதிய நேரங்களிலும் மகேஸ்வர பூசையில் அன்னம் பாலிக்கப்பெறும். அடியார்கள் திரண்டு வருமாறு வேண்டுகின்றார்கள்.

### புகலூர் பாடுமின் .

புகலூர் பாடுமின் புலவீர்காள் என்று சுந்தரமூர்த்தி நாயனார் புலவர்களை 1200 ஆண்டுகளுக்கு முன் ஊக்குவித்தார். அந்தப் புகலூர் இன்று 200 கோடி ரூபா பெறுமதியான இயந்திரங்கள் மூலம் 50,000 தொன் பத்திரிகைக் காகிதமும், 40,000 தொன் புத்தக காகிதமும் செய்கிறது.

## அமிர்தகீதை-சிவானந்தர் அருள் உரை

1. உன்னிடம் உள்ளதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள். பெரியவர்களுக்குத் தொண்டு செய்.
2. அகந்தை இல்லாமல் பணியாற்று. இறைவன் கையில் நீ ஒரு கருவி என்று நினைத்துக் கொள்.
3. எப்பொழுதும் உன்பணிகளை இறைவனுக்கே அர்ப்பணித்து விடு. பயன்களையும் அவருக்கே அர்ப்பணித்து விடு.
4. வெற்றி தோல்வி, லாபம் நட்டம், இன்பம் துன்பம் இவற்றில் சமநோக்குள்ளவனாயிரு, அஃதாவது ஒரே மனநிலையுள்ளவனாயிரு.
5. எல்லாவித அபிமானங்களையும் துறந்து விடு. நீ செய்யும் பணிகளுக்கு நன்றியையோ, பாராட்டுதலையோ எதிர்பாராதே.
6. தொண்டு செய்யும் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்திரு. கிடைக்கும் சந்தர்ப்பத்தை நழுவவிடாதே.
7. எவருடனும் வேறுபாடின்றிப் பண்புடன் பழகப் பழகிக் கொள். எவருடனும் வேறுபாடு காணாதே.
8. நீ தான் உன் தலைவிதியைத் தீர்மானிக்கவேண்டும். ஒருசெயலின் விளைவை நீ தான் பெறவேண்டும்.
9. இறைவனுடைய திருநாமம் இந்தச் சம்சார சாகரத்தைக் கடக்க நல்ல துணையாகும்.
10. பக்தி என்பது இறைவனிடம் செலுத்தும் மேலான அன்பாகும். அன்புக்காகவே அன்பு செலுத்துவதாகும்.
11. மிகவுயர்ந்த அன்பில் பக்தன் தன்னைப் பற்றிய நினைவே இல்லாமல் இருக்கிறான்.
12. பரபக்தியும் ஞானமும் ஒன்றே. பக்தி முடிவில் ஞானமாக மாறிவிடுகிறது.

## சித்தர்கள் கண்ட பற்ப செந்தூரங்கள்

தங்கசெந்தூரம், தாம்புரசெந்தூரம், தாளகசெந்தூரம், இரசசெந்தூரம், அப்பரகசெந்தூரம், கெந்தகசெந்தூரம், கருவங்கசெந்தூரம், அயசெந்தூரம், அயவீரசெந்தூரம், அயபவளசெந்தூரம், நாராயணசெந்தூரம், சுரபேந்திரர் செந்தூரம், அரிவன்னி செந்தூரம், தாவிச்செந்தூரம், வீரசெநதூரம், காந்தசெந்தூரம், பவளபற்பம். நாகபற்பம், முத்துப்பற்பம், ஜலாசத்துப்பற்பம், வெள்ளி பற்பம், மான்கொம்புபற்பம். உப்புச்சுன்னம், லிங்க வெள்ளை. தாளக்கட்டு.

இவை யாவும் உயர்ந்ததர மருந்துகள். தங்கம்' வெள்ளி, செம்பு, இரும்பு, இரசம், பவளம், கெந்தகம், முத்து, மான்கொம்பு முதலிய மூலப்பொருள்களை விஞ்ஞானமுறைப்படி பலவித இரசாயன மாற்றங்களுக்குட்படுத்தி, நீற்று நீருக்கிப் பெருமளவில் முயன்று தயாரித்த ஔடதங்கள், தீராத நோய்களைத் தீர்த்தன.

நோய் தீர்த்தமையோடு உடம்பை வளர்க்கவும், அதைத் தங்கம் போல ஈர்க்கவும், இரும்பு போலாக்கவும், இலேசாக்கவும், நீண்டகாலம் நிலைக்கவும் செய்தன.

★ பிரம்மத்தைவிட அறிவதற்கு எதுவும் கிடையாது ★

# 9 ஆம் மாத மகத்துவம்

வழமைபோல இவ்வாண்டு செப்ரம்பர் மாதமும் ஆவணி புரட்டாதி மாதங்களின் இணைப்பான காலப் பகுதிதான். இம்மாதத்தில் ஆண்டுதோறும் கொண்டாடப்பெறுகிற பிறந்தநாள்கள், மறைந்த நாள்கள், குரு பூசைநாள்கள், விரதநாள்கள் பலவாக வந்துள்ளன.

பெரியவர்கள், நல்லவர்கள், தியாகிகள், புலவர்கள் பலர் நினைவுக்குரியவர்களாயுள்ளார்கள். தனிநாயக அடிகளார் யாழ்ப்பாணத்தில் ஒரு மூலையில் ஒரு பழைய தீவுக்குரியவராய போதிலும், உலகமளாவிய ஒப்பற்ற தமிழராய பெரியார். அவர் வணக்கத்துக்குரிய அடிகளாயினும், அடியார்களுக்கு அடியாராய தமிழர். அவர் முருக உபாசனையும் திருமூலர் அபிமானியும் தமிழடிமையுமாவர்.




ஆண்டுதோறும் நடராசப் பெருமானுக்குத் திவ்விய அபிடேகங்கள் ஆறுமுறை நடைபெறுதல் வழக்கம். அவற்றுள் ஒன்று இம்மாதம் நடைபெறுகிறது. உலகத்தையே ஆட்டுபவன் ஒட்டுபவன் அவனுக்கு எந்நேரமும் கங்கை குளிர்மையைத் தந்த போதிலும், இந்த அபிடேகங்களில் அவன் பிரியமானவன். குறைவற அபிடேகஞ்செய்து நாம் குதூகலம் அடைகிறோம்.



விரதங்களுள் உமா மகேஸ்வர விரதமும் ஒன்று. சைவசமயத்தவர் கண்ட உயர்ந்த விரதங்களுள் இதுவும் ஒன்று. இதனால் பல பயன்கள் உண்டு.



## பாரதியார்

இந்தியத்தாயின் மைந்தர்களுள் இமயம் முதல் குமரி வரை கொண்டாடப்பெறும் மைந்தர்களுள் சுப்பிரமணிய பாரதியாரும் ஒருவர். குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை படித்துக் கொள்ள வேண்டிய பாடல்களை ஆயிரக் கணக்கில் பாடிக் குவித்தவர். பல மொழிகளறிந்தவர். பல துறைகளறிந்தவர். எவருக்கும் அஞ்சாதவர். தமிழுக்கும் ஞானத்திற்கும் அஞ்சியவர். ஞானத்துறையில் யாழ்ப்பாணத்துக்குத் தலைசாய்த்து வணங்கியவர். பருத்தித்துறையைச் சேர்ந்த அருளம்பலம் சுவாமியை யாழ்ப்பாணச்சுவாமி என்றும் ஞானத்தோணி என்றும் பாடியவர்.



## கிருஷ்ணன்

பத்து அவதாரங்களுள் கிருஷ்ணாவதாரம் லீலைகள் என்னும் விளையாடல்கள் பல நடைபெற்ற அவதாரம். எல்லா அவதாரங்களும் மகிமை வாய்ந்தனவாயினும் நாள்தோறும் நம்மவர் நினைவிலிருக்கும் அவதாரம் கிருஷ்ணாவதாரம். தாய்மாமன் கம்சன் செய்த வஞ்சனைகளையெல்லாம் புறங்கண்டு, அசுரர் அரக்கர் கெடுபிடிகளையெல்லாம் புறங்கண்டு, யுத்த களத்தில் பக்தர் பொருட்டுத் தேரூர்ந்து, சங்கும் ஊதியவர் கிருஷ்ணன்.

★ பிரம்மம் எதிலும் ஊடுருவி நிலவி நிற்பது ★

உ

## திவசம், மாஹாளயம்

திவசம் மாஹாளயம் என்பன அமரரான உறவினர் பொருட்டுச் செய்கின்ற பிதிர்க்கடன். என்றோ மறைந்து எத்தனையோ பிறவிகள் எடுத்து எங்கே போனார்களோ என்று தெரியாதவர்களுக்கு, நாம் பிதிர்க்கடனை நீடிப்பதா? என நினைப்பவர்களும் இருப்பார்கள். அவர்கள் தங்கள் மூதாதையரை நினைப்பதற்காகவும் பழைய பொருளாதாரக் கட்டுக்கோப்பில் பிராமணன் ஒருவருக்கு ஒரு வேளை உபசரிப்புக் கொடுத்து, அவரைக் கொண்டு அமரராய உறவினர் பிறவி எடுக்காவிட்டால் ஆனந்த நிலையில் இருப்பதற்கு ஓர் ஆசியும், தற்செயலாக மீண்டும் பிறந்திருந்தால் எடுத்த பிறப்பில் சுபீட்சம் பெறவும் வாழ்த்துவதாகவும் கொள்ளலாம். முந்தையோர் மரபில் வந்த வழக்கத்தைச் செய்வதில் தவறு இல்லை.



## சிவானந்தர்

சிவானந்த மகரிஷிக்கு வயது நூறு. அவர் தமது நூற்றுக்கணக்கான நூல்கள் மூலம் எங்கள் மத்தியில் வாழ்கின்றார். நல்லொழுக்கத்தையும், கடமையுணர்வையும், கடவுள் வழிபாட்டையும், ஞானவொழுக்கத்தையும், பற்றற்ற வாழ்வையும் வசிட்டர் வழிவந்த யோகவாசிட்டம் முதலான ஞானக்களஞ்சியங்கள் மூலம் நமக்கு விளக்கியவர் அவர். அவரை நினைத்தல் நல்லது.

## ஆனந்தர் இளமை

ஆனந்தக்குமாரசுவாமி வெள்ளைக்கார அம்மா வயிற்றிற்பிறந்த தமிழன். உலகப்புகழ் பெற்ற கலைஞன். கடவுட் கலைஞன். கல்பேசும் கதைகளை எங்களுக்கு எழுதித்தந்த கலைஞன். கலைஞருள், யோகியும் கலாநிதியும் விநோதருமானவர்.

## அருணாசலம்

செப்ரம்பர் மாதம் தந்த செம்மல்களுள் சேர் அருணாசலம் அவர்களும் ஒருவர்.பேயர் படைத்த பொன்னம்பலத் தருமவான் பயந்த மைந்தர் மூவருள், மூன்றாமவராய் வந்த அவர் இலங்கையில் சாதித்த சாதனைகள் மிகப்பல. றோயற் கல்லூரியில் புலமைப் பரிசில், கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்தில் முதுமாணிப்பட்டம், முதல் சிவில் உத்தியோகச்சிறப்பு, சுதந்திரம் கேட்ட துணிவு, பல்கலைச்கழகம் கேட்ட பரிவு, தேசிய மகாசபை உருவாக்கிய செம்மை, தமிழர் மகாசபை கண்ட மாண்பு, குடிசன மதிப்புக்கண்ட திறமை, சைவச்சால்பு நிறுவிய சிறப்பு இன்னும் பலவாய பண்புகளின் அடைவு.

## திரு. வி. க.

திருவாரூர் விருத்தாசலம் தந்த சகோதரர் இருவருள் இளையவரான கலியாணசுந்தரர் இளமையில் ஆறுமுக நாவலர் பரம்பரைக் கல்வி கற்றவர். நாவலர் மாணாக்கர் தியாகராசபிள்ளை மாணாக்கர் மேலைப் புலோலி கதிரைவேற்பிள்ளை. இவரிடம் முறையாகக் கற்று முறுக்கேறிய திரு. வி. க. சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், சீர்திருத்தவாதி, தேசத்தொண்டர், பத்திராதிபர், நூலாசிரியர், உரையாசிரியர், தொழிலாளர் தொண்டர். சமயத்திற் சமரசங்கண்ட ஞானி. இளமை விருந்து முதல் முதுமைப் பிதற்றல் வரை இலக்கியமாகவுள்ளவை செய்தவர் தீரர்.

## அண்ணாமலைச் செட்டியார்

தமிழ்நாட்டில் சோழநாடு, பாண்டிநாடு என்பன எல்லை பிரித்தமைந்த வேளையிலும், எல்லையற்று நிலவிய நாடு செட்டிநாடு. தமிழும் சைவமும் வளர்க்கவென்றே வந்த தனவைசியசிகாமணிகளுள் அரசர் என்றும் செட்டியார் என்றும் தாமரைப்பூ என்றாற்போல, ஒருங்கமைய வாழ்ந்து பெருந் தொண்டும் பணியும் செய்த கோமான் அண்ணாமலை அவர்கள். திருவேட்களம் என்னும் திருப்பதி இன்று பென்னம் பெரிய பல்கலைக்கழக வளாகமாகமாறும் வகை செய்த செம்மல் அவர். வித்துவான்கள் என்றும் புலவர்கள் என்றும், சங்கீத பூஷணங்கள் என்றும் பட்டதாரிகள் என்றும், முதுமாணிகள் என்றும், கலாநிதிகள் கல்விமான்கள் உருவாகி வெளியேற வாய்ப்பும் வசதியும் நல்கும் கழகம் அண்ணாமலைச் செட்டியாரின் உபகரிப்பு.



**இவர் யாரோ?**

வெளிநாட்டு பிரமுகருமல்லர். உள்ளூர்த் தலைவரும் அல்லர். எங்கள் மில்க்வைற் தொழிலகத்தின் உழைக்கும் கரம்தான். இஃது என்ன நிகழ்ச்சியோ வெனின் நாங்கள் எங்கள் ஆதரவாளர் வசதிகருதி நல்லூரில் திருவிழா நாள்களில் திறந்து வைத்த விற்பனை நிலையத்தின் பொறுப்பதிகாரியாயிருந்து, லட்சக்கணக்கான மேலுறைகளை மீளவாங்கி, தகுந்த பரிசுகள் கொடுத்து, விற்பனையை விருத்தி செய்த செயல் வீரன், திரு. நவரத்தினராசா தொழிலதிபரிடம் தகுந்த பரிசு பெறும் காட்சியேயாம்.

★ ஆசை அறுபட்டால் இப்பிறப்பிலேயே முத்தி கிடைக்கும் ★

## எங்கள் தருமர்

அமரர்

## க. இரத்தினகோபால் அவர்கள்

## ஓராண்டு நினைவு தினம் 11-9-1987



தோற்றம்:
**25 - 02 - 1923**

மறைவு:
**23 - 08 - 1986**

மகாபாரதத்தில் தர்மரைப் போன்று எம் ஐவருக்கும் மூத்தவராக இருந்து வழிகாட்டியாக வாழ்ந்தார். எங்கள் குடும்பம் மிகவும் பெரியதாக இருந்ததால் சிறு வயதினிலே வறுமையில் வாழ்ந்தோம். அவர் எமக்கு உறுதுணையாக வாழ்ந்தார். எமது குடும்பத்திலே கல்வியை நன்றாகப் படித்துத் தானும் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்து, எமது குடும்ப வருமானத்துக்கு உதவினார்.

தான் கற்ற கல்வியினால் சகோதரர்க்கு உதவினார். என்னைச் சிறுவயதினிலே, தான் உத்தியோகம் புரிந்த தோட்டத்திற்கு அழைத்துப் பாடசாலை ஆசிரியராக்கினார். அங்கு பாரிய றப்பர் ஆலையில் றப்பர் மேக்கர் வேலையைப் பழக்கினார். முன்னர் ஆங்கிலத் துரைமாரின்கீழ் இயங்கிய தோட்டங்கள், இந்நாட்டு அரசின்கீழ் கைமாறியதும் வேலையிலிருந்து இளைப்பாறி எங்கள் தொழிற்சாலை வளர்ச்சிக்கான ஆலோசகராக இருந்து தொழிலகத்தைக் கண்போல் பாதுகாத்து வந்தார். என் அண்ணரின் பிரிவு நமக்கும்,எங்கள் மில்க்வைற் குடும்பத்தாருக்கும் பேரிழப்பாகும். அவர் காட்டிய நல்ல பாதையில் செல்வோமாக.

ஓம் சாந்தி!

"திரு ஆலவாய்"
யாழ்ப்பாணம்.

சிவநெறிப் புரவலர்
**க. கனகராசா ஜே.பி.**

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய**
**எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர், மைத்துனியர்.




**விஞ்ஞான ரீதியில் தயாரானது**
**நுரைவளம் கூடியது**

## மில்க்வைற் சலவைப் பவுடர்




சிறிய பைக்கற்றுகளிலும் எங்கும் கிடைக்கும்
விசேஷமாக மாணாக்கியர் அணியும் வெண்ணிறச்
சீருடைகளை விரைவில் அழுக்கு நீக்கித்
தூய வெண்ணிறம் பொருந்தச் சுத்தஞ் செய்வது
மில்க்வைற் சலவைப் பவுடர்
2-00 ரூபா பெறுமதியுள்ள பைக்கற்றின்
வெற்றுப் பைக்கற்றுக்கள் (30) சேகரித்துக் கொடுத்து
★ அழகிய பாடசாலைப்பை ★
ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெ[illegible]ப் [illegible]ரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் திரு. [illegible]. குலரத்தினம் 1 - 9 - 1987.